பக்கங்கள்: 05

# தீம்புனல் THEEMPUNAL

மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:45 | 04.01.2024 வியாழக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053

# யாழ்ப்பாணத்தில் கடும் பாதுகாப்பு மூவரைக் கைது செய்த பொலிஸ்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வதால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு ரணில் செல்லவுள்ளதால் மாவட்ட செயலக வளாகத்தில் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

ரணிலின் வருகையால் போராட்டம் நடத்த முற்பட்ட மூவரை பொலிஸார் கைது செய்தனர்.

இன்று கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பங்குகொள்ளவுள்ள ஜனாதிபதி ரணில், இரவு 7 மணி முதல் 9.30 வரை சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் வடக்கில் நான்கு நாட்கள் தங்கியிருந்து தொடர் சந்திப்புக்களை நடத்தவுள்ளார்.

## உடுத்துறையில் கரை ஒதுங்கிய மர்மப் பொருள்



உடுத்துறை அரசடி முருகன் கோயில் அருகே மர்மப் பொருளொன்று கரையொதுங்கியுள்ளது.

கரைக்கு வந்த பொருளில் Asia 2 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால், ஏதாவது கப்பலிலிருந்து அது தவறி விழுந்து கரையொதுங்கியிருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக உடுத்துறை, வேம்படி, நாகர்கோவில் ஆகிய பகுதிகளில் பல்வேறு விதமான மர்மப் பொருட்கள் கரையொதுங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாண வைத்தியசாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர் அட்டகாசம்



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் நேற்று பெண் பார்வையாளருடன் அநாகரிகமான முறையில் நடந்துள்ளதுடன் ஒருவரைத் தாக்க முயற்சி செய்தார்.

கண் சத்திர சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண்ணின் மகள் வீட்டில் இருந்து உணவு எடுத்துக் கொண்டு சென்று தாயாருக்கு வழங்கினார். அப்போது அங்கு சென்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் அந்தப் பெண்ணுடன் அநாகரிகமான முறையில் நடந்து நாகரிகமற்ற வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டார்.

அங்கிருந்து சென்ற அவர் ஒருவரைத் தாக்க முயற்சித்தார். அந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் இதற்கு முன்னரும் பல தடவைகள் நோயாளிகளுடனும் பார்வையாளர்களுடனும் அநாகரிகமான முறையில் நடந்ததால் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டவர் என்றும் இவர் தொடர்ந்தும் இவ்வாறே செயற்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

# ஹூவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக களமிறங்கும் இலங்கை கடற்படை

ஹூவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக இலங்கை கடற்படையின் கப்பலை செங்கடல் பகுதிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

“உக்ரைனிலும் போர், காஸாவில் மேலும் ஒரு போர், இதனால் பொருட்களின் விலை அதிகரிக்கலாம். தற்போது செங்கடலில் பயணிக்கும் கப்பல்கள் மீது ஹூவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணைகளை அனுப்புவதால் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. இக்கப்பல்கள் செங்கடல் கடலில் பயணிக்காமல் தென்னாபிரிக்காவை சுற்றிச் சென்றால் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும். இதனால் ஹூவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக நாமும் இணைந்துள்ளோம். கப்பல்களை பாதுகாப்பதற்காக இலங்கை கடற்படையின் கப்பல் ஒன்றும் செங்கடல் பகுதிக்கு அனுப்பப்படவுள்ளது. இதன் போது இரண்டு வாரங்களுக்கு அங்கு கப்பலை அனுப்பினால் 250 மில்லியன் ரூபாய் செலவாகும். நாங்கள் கடினமான இடத்தில் இருக்கிறோம். எனினும் அதைப் பாதுகாக்க வேண்டும்.” என்றார்.

# ஜனாதிபதி நிதிய மருத்துவக் கொடுப்பனவு அதிகரிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக ஜனாதிபதி நிதியத்தினால் தற்போது வழங்கப்படும் மருத்துவ உதவிக் கொடுப்பனவுகளை 2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 50% இலிருந்து 100% ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2024ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியின் வழிகாட்டுதலுக்கு அமைய ஜனாதிபதி நிதியத்தின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் சரத்குமார தெரிவித்தார்.

இந்த ஆண்டு முதல், 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு, தனியார் அல்லது அரை அரசு மருத்துவமனைகளில் கண் சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கு மருத்துவ உதவி வழங்கப்படும்.

# மின்சாரசபை தொழிற் சங்கங்களுக்கு தடை உத்தரவு

மின்சாரசபையின் தொழிற்சங்கத் தலைவர்கள் குழுவிற்கு எதிராக கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் தடை உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.

ரஞ்சன் ஜயலால் உள்ளிட்டோர் இன்று ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, நிதியமைச்சு வளாகம் மற்றும் மத்திய வங்கி வளாகங்களுக்குள் பிரவேசிப்பதை தவிர்க்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்சாரசபையை தனியார் மயமாக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருவதாக தெரிவித்து அதன் தொழிற்சங்கங்கள் எதிர்ப்புப் பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளன.

# பொலிஸாரால் புதிய அவசர இலக்கம் அறிமுகம்

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் குறித்து முறைப்பாடு அளிக்க பொலிஸாரால் அவசர தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதுபோன்ற சம்பவங்கள் தொடர்பாக ஏதேனும் தகவல் தெரிந்தால் 109 என்ற அவசர இலக்கத்திற்கு தகவல் தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# 27 இலட்சம் பேரை வறியவர்களாக்கிய அரசாங்கம்

இலங்கையின் சமகால அரசாங்கத்தின் செயற்பாடுகளினால் 27 லட்சம் மக்கள் புதிதாக வறியவர்களாக மாறியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு அரசியல் மற்றும் பொருளாதார சவால்கள் என்ற தலைப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்தெரிவித்தார். புடவை, சில் ஆடைகள் பகிர்ந்து, கடனை மறுசீரமைத்து, அரசு செலவீனங்களை கட்டுப்படுத்தி தேர்தலில் வெற்றி பெறமுடியாது.

அரசின் வருவாயை அதிகரிப்பது போன்றவற்றை சர்வதேச நாணய நிதியம் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் செய்ய வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

வரிசைகள், பொருட்கள் தட்டுப்பாடு, உரத் தட்டுப்பாடு, வாகனங்கள் தவிர மற்ற அனைத்து பொருட்களுக்கும் இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதாலும், நாடு நிதி ரீதியாக ஸ்திரத்தன்மை அடைந்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மத்திய வங்கியின் பிரதான ஆளுநர் மற்றும் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

கடந்த பண்டிகைக் காலங்களில் அதிகளவான மக்கள் நாட்டிலும் வெளிநாடுகளுக்கும் சென்று பணத்தைச் செலவு செய்ததாலும், நாட்டின் பல இடங்களில் கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டதாலும் நாடு வழமைக்குத் திரும்பியுள்ளதாகவும் அவர்கள் நினைப்பதாக சம்பிக்க குறிப்பிட்டுள்ளார்.

அதிக மின்சாரக் கட்டணம், அதிக எரிபொருள் கட்டணம், தொலைபேசிக் கட்டணங்கள் என்பன நாட்டின் பொருளாதார வளர்ச்சியை முடக்கி அதன் மூலம் பொருளாதாரச் சுருக்கத்தை ஏற்படுத்தும் காரணியாக மாறி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக 60 சதவீதத்திற்கும் அதிகமான குடும்பங்களின் மாத வருமானம் குறைந்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியின் தாக்கம் தொடர்பாக நாடளாவிய ரீதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட குடும்ப கணக்கெடுப்பில் இது தெரியவந்துள்ளதாக திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

கணக்கெடுப்பின் படி இலங்கையில் குடும்பங்களின் மாத வருமானம் 60.5 வீதத்தால் குறைந்துள்ளதுடன், குடும்பங்களின் மாதாந்த செலவுகள் 91 வீதத்தால் அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

தற்போது 3.4 வீதமான குடும்பங்களின் வருமானம் மட்டுமே அதிகரித்துள்ள நிலையில், 36.6 வீதமான குடும்பங்களின் வருமானம் மாறாமல் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வருமானம் குறைந்த குடும்பங்கள் கடன் வாங்குதல், பொருட்களை அடமானம் வைப்பது, பிறரிடம் உணவு மற்றும் பணம் கேட்பது போன்ற உண்மைகள் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியினால் 22 வீதமான குடும்பங்கள் கடனினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது

போக்குவரத்து, எரிபொருள், மின் கட்டணம் தொலைபேசி ஆகியவற்றின் செலவுகள் அதிகமாகி விட்டன. மாதச் சம்பளம் பெறும் ஊழியர்கள் வருமானத்தில் அரைவாசியை இப்படியானவற்றுக்குச் செலவழிக்கிறார்கள். எஞ்சிய சம்பளத்தில் மறைய செலவுகளைச் சரிக்கட்ட முடியாமல் தவிக்கின்றனர்.

கூலி வேலை செய்பவர்களின் நிலை மிகமோசமானது. ஒருநாள் வேலை இல்லையென்றால் அவர்களால் எதுவும் செய்ய முடியாது.

அரசாங்கம் இதைப் பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

# ரஷ்யா, உக்ரைன் கைதிகள் பரிமாற்றம்

ரஷ்யா, உக்ரைன் ஆகிய நாடுகள் தலா 200 சிறை பிடிக்கப்பட்ட வீரர்களை பரிமாற்றம் செய்து கொண்டதாக புதன்கிழமை தெரிவித்துள்ள நிலையில், போர் தொடங்கியதற்குப் பின்னர் மிகப்பெரிய கைதிகள் பரிமாற்றமாக இதை அதிகாரிகள் விவரித்துள்ளனர்.

பெப்ரவரி 2022 இல் போர் தொடங்கியதற்கு பின்னர் இரு நாடுகளும் டஜனுக்கும் மேற்பட்ட முறை கைதிகள் பரிமாற்றத்தை செய்து கொண்ட நிலையில், கடந்தாண்டு பிற்பகுதியில் இந்த பரிமாற்றம் நிறுத்தப்பட்டது.



இவ்விரு நாடுகளும் அடுத்தடுத்து வெளியிட்ட அறிக்கைகளில், ஐக்கிய அரபு அமீரகத்தின் மத்தியஸ்த்தில் 200க்கும் மேற்பட்ட சிறைபிடிக்கப்பட்ட வீரர்கள், பரிமாறி கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. ஏறக்குறைய ஐந்து மாதங்களில் இரு தரப்பினரும் எந்தப் பரிமாற்றத்தை அறிவிக்கவில்லை. இது அரசியல் காரணங்களுக்காக மாஸ்கோ வேண்டுமென்றே ஒப்பந்தங்களைத் தடுப்பதாகக் கீவ் குற்றம் சாட்டுவதற்கு காரணமானது.

# ஈரானில் இரட்டை குண்டுவெடிப்பில் 95 பேர் பலி



ஈரானின் தென்கிழக்கு நகரமான கெர்மனில் நேற்று (3 ஜனவரி 2024 ) நடைபெற்ற ஜெனரல் சுலைமானியின் நான்காவது ஆண்டு நினைவேந்தல் விழாவில் இரட்டை வெடிகுண்டு வெடித்ததில், குறைந்தது 95 பேர் கொல்லப்பட்டனர், 200 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

2020 ஆம் ஆண்டு அமெரிக்க ஆளில்லா விமானத்தால் கொல்லப்பட்ட ஈரானிய படைத்தளபதி காசிம் சுலைமானியின் நினைவு தினமான நேற்று, அவருக்கு அஞ்சலி செலுத்த, அவரின் நினைவிடத்தில் நூற்றுக்கணக்கானோர் கூடியிருந்தபோது இரட்டை குண்டுவெடிப்பு ஏற்பட்டது. ஈரானிய அரசு தொலைக்காட்சியின்படி, இரண்டு குண்டு வெடிப்புகளும் 20 நிமிட இடைவேளையில் நடந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

சாஹேப் அல்-ஜமான் மசூதிக்கு அருகில் இந்த குண்டுவெடிப்புகள் நடந்ததாக மாநில ஒளிபரப்பு நிறுவனமான இரிப் தெரிவித்துள்ளது.

# மியன்மாரில் 9652 கைதிகள் விடுதலை

சுதந்திர தினத்தைக் குறிக்கும் வகையில் பொது மன்னிப்பின் கீழ் 114 வெளிநாட்டவர்கள் உட்பட 9,652 கைதிகளை விடுதலை செய்யப்போவதாக மியன்மாரின் இராணுவ அரசாங்கம் அறிவித்துள்ளது. இன்னும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களில் நோபல் பரிசு பெற்ற ஆங் சான் சூகியும் உள்ளார், அவர் தூண்டுதல் மற்றும் தேர்தல் மோசடிகள் முதல் ஊழல் வரையிலான குற்றங்களில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட பின்னர் 27 ஆண்டுகள் வரை தடுப்புக்காவலில் தண்டனையை சேர்த்து மேல்முறையீடு செய்து வருகிறார். அவள் எல்லா குற்றச்சாட்டுகளையும் மறுக்கிறாள். அவர் ஒரு



சுயாதீன நீதிமன்றத்தின் மூலம் உரிய நடைமுறையைப் பெற்றுள்ளார் என்று இராணுவம் வலியுறுத்துகிறது.

# ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

இஸ்ரேல்-ஹமாஸ் இயக்கத்தினர் இடையே தொடங்கிய போரில் ஏமன் நாட்டைச் சேர்ந்த ஹூதி கிளர்ச்சியாளர்கள் பாலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்தனர். அதன் எதிரொலியாக செங்கடலில் பயணிக்கும் இஸ்ரேல் ஆதரவு நாடுகளில் இருந்து வரும் சரக்கு கப்பல்கள் மீது ஹூதி கிளர்ச்சியாளர்கள் தொடர் தாக்குதலில் ஈடுபடுகிறார்கள். இதனை எதிர்த்து அமெரிக்க இராணுவத்தின் போர் கப்பல்கள் செங்கடல் பகுதிகளில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வரு



கிறது. இந்நிலையில் செங்கடலில் கண்காணிப்புப் பணி மேற்கொள்ளும் அமெரிக்கா இராணுவப் படை பிரிவு எக்ஸ் தளத்தில் கருத்து ஒன்றை பதிவிட்டுள்ளது.

செங்கடலில் கப்பல்கள் மீதான தாக்குதலை நிறுத்தாவிட்டால், ஏமனின் ஹூதி கிளர்ச்சியாளர்கள் குறிப்பிடப்படாத விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என அமெரிக்கா தலைமையிலான 12 நாடுகள் கூட்டாக எச்சரித்துள்ளன.

# தேடப்பட்ட 84 பேர் சிக்கினர்

யுக்திய நடவடிக்கையின் மூலம் இன்று (04) நள்ளிரவு 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 1038 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 67 பேரிடம், தடுப்பு காவல் உத்தரவின் அடிப்படையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் போதைக்கு அடிமையான 43 பேர் புனர்வாழ்விற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் இருந்து 417 கிராம் ஹெரோயின், 205 கிராம் ஐஸ் மற்றும் 722 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அத்துடன், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் விசேட பணியகத்தின் பட்டியலில் இருந்த 84 சந்தேக நபர்களும் இந்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# காலி சிறைச்சாலையில் கைதி ஒருவர் காய்ச்சல்

காரணமாக காலி கராபிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்ததாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்த கைதி கடந்த வருடம் டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி கொள்ளைச் சம்பவம் தொடர்பில் சிறையில் அடைக்கப்பட்டார்.

சுகவீனம் காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கைதி பின்னர் மேலதிக சிகிச்சைக்காக காலி கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

கடந்த வாரத்தில் மாத்தறை சிறைச்சாலையில் இரண்டு கைதிகள் காய்ச்சல் காரணமாக உயிரிழந்தனர்.

# எதிர்க்கட்சிக்கு தாவினார் தயாஸ்ரீத திசேரா



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புத்தளம் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தயாஸ்ரீத திசேரா எதிர்க்கட்சியில் இணையத் தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பில் அவரது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் தெரிவிக்கையில்,

“நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையை கருத்திற்கொண்டு சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொள்வதற்கு நான் மிகவும் தீர்க்கமான முடிவை எடுத்தேன். எனது அரசியல் வரலாற்றிலும் நிகழ்காலத்திலும் இது மிகவும் முக்கியமான தருணம், எனது 15 வருட பாராளுமன்ற அனுபவத்துடன் எனது நாத்தாண்டி தொகுதிக்கும் புத்தளம் மாவட்டத்திற்கும் தொடர்ந்து சேவையாற்ற வேண்டும் என்பதே எனது ஒரே நம்பிக்கை.”

முன்னதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் டி சில்வா ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்டார்.

அவருக்கு அம்பலாங்கொடை தொகுதி அமைப்பாளர் பதவி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# காணாமல் போனவர் இரு நாட்களின் பின் மீட்பு



மன்னம்பிட்டி - மாகந்தோட்டை பிரதேசத்தில் கடந்த இரண்டு நாட்களாக காணாமல் போயிருந்த நபர் ஒருவர் மரமொன்றில் இருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். இவர் மாகந்தோட்டை காட்டுப் பகுதியில் விறகு வெட்டச்சென்ற போது அங்கு இருந்த சிறுத்தையிடம் இருந்து தன்னை பாதுகாத்துக்கொள்ள மரத்தின் மீது ஏறியுள்ளார்.

அப்பகுதியில் சூழ்ந்த வெள்ளத்தால் இரண்டு நாட்களாகியும் அவர் மரத்திலேயே தங்கியிருந்துள்ளார். பொதுமக்களின் உதவியுடன் அவர் காப்பாற்றப்பட்டார்.

# சோதனை தாமதமாவதால் அரிசி இறக்குமதி பாதிப்பு

பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பாஸ்மதி அரிசியின் மொத்த ஒதுக்கீட்டைப் பயன்படுத்துவதற்கு இலங்கை அதிகாரிகளால் உள்ளூர் சோதனையில் தாமதம் தடையாக உள்ளது என தெரியவந்துள்ளது.

பாகிஸ்தான் அதிகாரிகள் இலங்கை சோதனை நடைமுறைகளால் ஏற்பட்ட தாமதம் குறித்து அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

# விஷேட தடுப்பூசி சேவை

ஒன்பது மாவட்டங்களை உள்ளடக்கி எதிர்வரும் 6 முதல் 9 மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு தட்டம்மை தடுப்பூசியை மேலதிகமாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு விசேட வைத்திய நிபுணர் சமித்த கினிகே தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்

“கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தறை, காலி, கல்முனை ஆகிய 09 பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தடுப்பூசித் திட்டம் ஆரம்பிக்கப்படுகிறது.

சிறு குழந்தைக்கு அம்மை நோய் வந்தால் அது நீண்டகாலச் சிக்கல்களுக்கு வழிவகுக்கும்.

இது தடுப்பூசியின் மேலதிக டோஸ் ஆகும். வயது பூர்த்தியடையும் போது பரிந்துரைக்கப்பட்ட தடுப்பூசியை கட்டாயமாகப் பெற வேண்டும்.” என்றார்.

# புதிய மின்சார சட்டத்திற்கு எதிராகப் போராட்டம்

இலங்கை மின்சாரசபையின் தொழிற்சங்கங்கள், ஊழியர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை இலங்கை மின்சாரசபையின் பதில் பொது முகாமையாளரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை மீறி அனைத்து ஊழியர்களின் விடுமுறையையும் இரத்து செய்து புதிதாக முன்மொழியப்பட்ட மின்சார சட்டத்திற்கு எதிராக திட்டமிட்ட ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கோட்டையிலுள்ள இ.போ.ச தலைமை அலுவலகத்திற்கு முன்பாக நேற்று நண்பகல் வேளையில் பெருமளவிலான ஊழியர்களின் பங்குபற்றுதலுடன் போராட்டம் நடத்தப்பட்டது.

மின்சாரத்தை அத்தியாவசிய சேவையாக ஜனாதிபதி அறிவித்தமைக்கு அமைவாக சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ள போதிலும், பல கோரிக்கைகளை முன்வைத்து மூன்று நாள் போராட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை மின்சாரசபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பு அழைப்பாளர் ரஞ்சன் ஜயலால் ஊடகங்களுக்கு தெரிவித்தார். வரும் நாட்களில் போராட்டம் தீவிரமடையும் என்றார்.

# குளிக்காத மனைவிக்கு எதிராக முறைப்பாடு

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த கணவன் ஒருவர் மனைவி குளிப்பதில்லை என அப்பிரதேச தலைவரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அண்மையில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட புதுத் தம்பதிகளிடத்திலே இந்த முரண்பாடு தோன்றியுள்ளது.

கணவனின் முறைப்பாட்டுக்கமைய பிரதேச தலைவர் மனைவியிடம் பேசி சமரசம் செய்ய முயற்சிகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# 122 வருடம் கழித்து நிகழ்ந்த வித்தியாச சாதனை

தென் ஆபிரிக்கா மற்றும் இந்திய கிரிக்கெட் அணிகள் மோதிய 2 ஆவது டெஸ்ட் போட்டி ஜனவரி 3 ஆம் திகதி கேப் டவுன் நகரில் துவங்கியது. அதில் ஏற்கெனவே முதல் போட்டியில் இன்னிங்ஸ் வெற்றி பெற்று ஆரம்பத்திலேயே முன்னிலை வகிக்கும் தென்னாபிரிக்கா டாஸ் வென்ற முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்த போதிலும் சுமாராக விளையாடி வெறும் 55 ஓட்டங்களுக்கு ஆல் அவுட்டானது. அந்த அணிக்கு அதிகபட்சமாக கெயில் வேர்ரின் 15 ஓட்டங்கள் எடுக்க இந்தியா சார்பில் அதிகபட்சமாக முகமது சிராஜ் 6 விக்கெட்டுகள் சாய்த்தார். அதைத் தொடர்ந்து களமிறங்கிய இந்திய அணியும் ஆரம்பம் முதலே தடுமாற்றமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெறும் 153 ஓட்டங்கள் எடுத்தது.

இந்திய அணிக்கு அதிகபட்சமாக விராட் கோலி 46 ஓட்டங்கள் தென்னாபிரிக்கா சார்பில் அதிகபட்சமாக நன்ரே பர்கர், லுங்கி நிகிடி, ரபாடா தலா 3 விக்கெட்டுகள் எடுத்தனர். அதைத் தொடர்ந்து 98 ஓட்டங்கள் பின்தங்கிய நிலைமையில் களமிறங்கிய





தென்னாபிரிக்கா முதல்நாள் முடிவில் 62 ஓட்டங்களில் 3 விக்கெட்களை எடுத்து இன்னும் 36 ஓட்டங்கள் பின்தங்கியுள்ளது. அந்த வகையில் இப்போட்டியின் முதல் நாளிலேயே 23 விக்கெட்டுகள் விழுந்து கிட்டத்தட்ட பாதிக்கும் மேற்பட்ட போட்டி முடிந்து போயுள்ளது என்றே சொல்லலாம். குறிப்பாக டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த தென்னாபிரிக்காவுக்கு 8 பேட்ஸ்மேன்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் அவுட்டான நிலையில் 2 பேர் மட்டுமே இரட்டை இலக்க ஓட்டங்களை தொட்ட போதிலும் 20 ஓட்டங்களைக்கூட தாண்ட முடியவில்லை.

அதைவிட இந்தியாவுக்கு கப்டன் ரோஹித் சர்மா 39, கில் 36, விராட் கோலி 46, ராகுல் 8 ஆகிய 4 பேட்ஸ்மேன்கள் மட்டுமே ஓட்டங்கள் எடுத்தார்கள். எஞ்சிய 6 பேட்ஸ்மேன்கள் டக் அவுட்டாகி பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்தார்கள்.

53/4 என்ற நிலையில் இருந்த இந்தியா அடுத்த 11 பந்துகளில் மேற்கொண்டு ஒரு ஓட்டம்கூட எடுக்காமல் 6 விக்கெட்களை இழந்து மோசமான சாதனை படைத்தது. அந்த வகையில் மலைத்தொடர்களைக் கொண்ட அழகான கேப் டவுன் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு எதிராக பேட்ஸ்மேன்கள் தெறித்து ஓடினார்கள் என்றே சொல்லலாம்.

மொத்தத்தில் 147 வருட வரலாறு கொண்ட டெஸ்ட் கிரிக்கெட்டில் 122 வருடங்கள் கழித்து முதல் நாளிலேயே அதிக விக்கெட்கள் விழுந்த 2 ஆவது போட்டி என்ற வித்தியாசமான சாதனையை இந்த தென்னாபிரிக்கா மற்றும் இந்தியா டெஸ்ட் போட்டி படைத்துள்ளது.

**அந்தப் பட்டியல்:**

1. 25 விக்கெட்கள், அவுஸ்திரேலியா - இங்கிலாந்து, மெல்போர்ன், 1902
2. 23 விக்கெட்கள், தென்னாபிரிக்கா - இந்தியா, கேப் டவுன், 2023
3. 22 விக்கெட்கள், இங்கிலாந்து - அவுஸ்திரேலியா, ஓவல், 1890
4. 22 விக்கெட்கள், அவுஸ்திரேலியா - மேற்கு இந்தியா, அடிலெய்ட், 1951
5. 21 விக்கெட்கள், தென்னாபிரிக்கா - இங்கிலாந்து, போர்ட் எலிஸபெத், 1896

# சேர்பியாவை வீழ்த்தியது அவுஸ்திரேலியா

யுனைடெட் கோப்பையின் காலிறுதியில் அவுஸ்திரேலியா 3-0 என்ற கணக்கில் சேர்பியாவை வீழ்த்தியதால், நோவக் ஜோகோவிச் தனது மணிக்கட்டில் காயத்துடன் தொடர்ந்து போராடினார்.

போலந்தும் 3-0 என்ற கணக்கில் சீனாவை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது, பிரான்ஸ் மற்றும் கிரீஸ் முறையே இத்தாலி மற்றும் கனடாவை ஸ்வீப் செய்து காலிறுதிக்கு முன்னேறின.



போட்டியின் போது வலது மணிக்கட்டில் பிரச்சினை இருந்த ஜோகோவிச், செக் குடியரசுக்கு எதிரான செர்பியாவின் முந்தைய குரூப் ஈ போட்டியில் ஜிரி லெஹெக்காவை கடந்த ஒரு வழியைக் கண்டார்.

இருப்பினும், உலகின் நம்பர் 1 வீரர் அலெக்ஸ் டி மினாருக்கு எதிராக போராடினார், அவுஸ்திரேலிய வீரர் ஒரு சிறந்த தற்காப்பு மற்றும் ஆதிக்க சேவையைப் பயன்படுத்தி 6-4 என்ற கணக்கில் வெற்றி பெற்றார்.

ஜோகோவிச், உலகின் நம்பர் 12 டி மினாருக்கு எதிராக தெளிவாக அசௌகரியத்தில் இருந்தார் மற்றும் முதல் செட்டின்போது பிசியோவால் இரண்டு முறை சிகிச்சை பெற்றார். காயம் குறித்து கவலைப்படவில்லை என்று ஜோகோவிச் தெரிவித்துள்ளார்.

"அவுஸ்திரேலியன் ஓபனுக்கான சரியான வடிவத்தில் என்னைப் பெற எனக்கு போதுமான நேரம் உள்ளது, அதுதான் இக்கட்டத்தில் மிகவும் முக்கியமானது" என்று அவர் கூறினார். "உண்மையாகச் சொல்வதென்றால், நான் நன்றாக இருப்பேன் என்று நினைக்கிறேன். ஒரு சீசனின் தொடக்க வாரத்தில் நான் 100% உடல்ரீதியாக, உணர்ச்சிரீதியாக, மனரீதியாக, விளையாட்டு வாரியாக இருக்கப் போவதில்லை என்பது எனக்குத் தெரியும். அவுஸ்திரேலிய ஓபன் ஜனவரி 14 ஆம் திகதி மெல் போர்னில் தொடங்குகிறது.

2018 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய ஓபனில் காலிறுதியில் தோல்வியடைந்த பிறகு ஜோகோவிச் அவுஸ்திரேலியாவில் சந்தித்த முதல் தோல்வி இதுவாகும்.

# சிறந்த PGA டூர் வீரராக ஷெஃப்லர்

ஆண்டின் சிறந்த PGA டூர் வீரராக ஸ்காட்டி ஷெஃப்லர், தேர்ந்தெடுக்கப்பட்டார் 2006-07 இல் டைகர் வூட்ஸுக்குப் பிறகு ஷெஃப்லர் முதல் பின் வெற்றியாளர் ஆவார். உலகின் நம்பர் 1 வீரர் வூட்ஸுக்குப் பிறகு சிறந்த புள்ளியியல் சீசனைக் கொண்டிருந்தார், டீ முதல் கிரீன் வரையிலான



அனைத்து முக்கிய பிரிவுகளிலும் கோல் அடித்ததில் அவர் முன்னணியில் இருந்தார்.

ஸ்காட்டி ஷெஃப்லர், மாஸ்டர்ஸ் சாம்பியனான ஜான் ரஹ்மை விட ஆண்டின் சிறந்த PGA டூர் வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், இது எல்.ஐ.வி கோல்ஃப் விளையாடியதற்காக ரஹ்முக்கு அபராதம் விதிக்கப்பட்டதா? என்ற கேள்வியை எழுப்புகிறது.

அவர் PGA டூர் வரலாற்றில் ஏழாவது-குறைந்த சரிசெய்தல் ஸ்கோரிங் சராசரியை (68.63) கொண்டிருந்தார், முதல் ஆறு வூட்ஸுக்கு சொந்தமானது. மேலும் செப்ரெம்பர் 2022 இல் தொடங்கிய ஒரு பருவத்தில் இருந்து 23 போட்டிகளில் ஆறு முறை மட்டுமே முதல் 10 இடங்களுக்குள் இருந்து வெளியேறினார். ஒரு கட்டத்தில், ஷெஃப்லர் தொடர்ந்து 18 தொடக்கங்களைச் சென்றார், அங்கு அவரது மோசமான முடிவு 12 ஆவது இடத்தில் இருந்தது.

பிளேயர்ஸ் சம்பியன்ஷிப் மற்றும் பீனிக்ஸ் ஓபன் ஆகியவற்றை ஷெஃப்லர் வென்றார்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 04.01.2024 அன்று வெளியிடப்பட்டது.